17th July 1957]

District Board Hospital at Tiruchendur

*125 *Q.*—SRI M. S. SELVARAJAN: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government have sanctioned the proposal to take over the District Board Hospital at Tiruchendur; and

(*b*) if so, when it is likely to be taken over?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI M. S. SELVARAJAN: அகில இந்தியாவிலிருந்தும் யாத்ரீகர்கள் தெய்வ வழிபாட்டிற்காக வரும் முக்கியமான இடங்களில் திருச்செந்தூரும் ஒன்றாக இருப்பதால், அங்குள்ள அந்த ஆஸ்பத்திரியை இந்த வருஷத்திலேயே எடுத்துக்கொள்வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: சென்ற வருஷம் ஒன்பது ஆஸ்பத்திரிகள் "ப்ரொவின்ஷியலைஸ்" செய்யப்பட்டன. இந்த வருஷம் இன்னும் ஐந்து ஆஸ்பத்திரிகள் சர்க்காரால் எடுத்துக்கொள்ளப்படும். அவைகளுள் திருச்செந்தூர் ஆஸ்பத்திரி இல்லை. திட்ட காலத்திற்குள் இன்னும் இருக்கும் 15 ஆஸ்பத்திரிகளும் எடுத்துக்கொள்ளப்படும் ; திருச்செந்தூரும் அவைகளுள் இருக்கும்.

SRI M. S. SELVARAJAN: இவ்வருஷம் எடுத்துக்கொள்ளவிருக்கும் ஆஸ்பத்திரிகளுள் திருநெல்வேலி ஜில்லாவிலிருந்து ஒன்றுகூட இல்லை என்ற காரணத்தினலாவது, இந்த ஆஸ்பத்திரியை இந்த வருஷம் உடனடியாக எடுத்துக்கொள்வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

MR. SPEAKER: அதுதான் இல்லை என்று கனம் மந்திரி அவர்கள் சொல்லிவிட்டார்களே.

THE HON. SRI M. A. MANICKAVELU: திருநெல்வேலி ஜில்லாவில் எற்கெனவே ஒன்று எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அது கோயில்பட்டியில் உள்ள ஆஸ்பத்திரி. இந்த வருஷம் எந்த ஆஸ்பத்திரிகளை எடுத்துக்கொள்வது என்பது எற்கெனவே நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னதையும் அனுசரித்து என்ன செய்ய முடியுமோ அதைச் செய்யலாம் என்று நினைக்கிறேன்.

SRI T. S. AUTHIMOOLAM: தாலுகாக்களிலுள்ள ஹெட்குவார்டர்ஸ் ஆஸ்பத்திரிகளை சர்க்கார் எடுத்துக்கொள்ளும் விஷயத்தில் என்ன என்ன விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் அறியலாமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: ஹெட்குவார்டர்ஸில் இருக்கும் ஆஸ்பத்திரிகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் விதி. ஆகவே ஹெட்குவார்டர்ஸ் ஆஸ்பத்திரிகளை முதலில் எடுத்துக்கொள்கிறோம்.

SRI A. R. SUBBIAH MUDALIAR: தாலுகா ஹெட்குவார்டர்ஸ் ஆஸ்பத்திரிகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் அடிப்படையான விதியா ? அல்லது ஜனத்தொகை அடிப்படையிலும் ஆஸ்பத்திரிகள் சர்க்காரால் எடுத்துக்கொள்ளப்படுகின்றனவா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: தாலுகா ஹெட்குவார்டர்ஸ் ஆஸ்பத்திரிகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் விதி.

SRI S. NAGARAJA MONIGAR: சர்க்கார் இம்மாதிரியாக ஆஸ்பத்திரிகளை எடுத்துக்கொள்ளும்போது, பிற்போக்கான இடங்களில் உள்ள ஆஸ்பத்திரிகளுக்கும், மிகவும் அவசியமாக எடுத்துக்கொள்ளப்படவேண்டிய ஆஸ்பத்திரிகளுக்கும் முதலிடம் (ப்ரையாரிடி) கொடுக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.